1993 ஏப்ரல் 2]

7, அரசினர் சட்டமுன்வடிவு—அறிமுகம் செய்தல்.

டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. மானியக் கோரிக்கைகள், 1993-94, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 46 — செய்தி—திரைப்படத் தொழில் நுட்பவியல்

(ஆ) கோரிக்கை எண் 50 — சுற்றுலா

மாண்புமிகு பேரவைத் தலைவர் :1993-94 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 46, செய்திதிரைப்படத் தொழில் நுட்பவியல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.